# விபஸ்ஸனா
## செய்தி மடல்
### தமிழ் மாத இதழ்

(விபஸ்ஸனா: ஸயாஜி ஊபாகின் வழிமரபில், திரு சத்திய நாராயண கோயங்கா அவர்களால் போதிக்கப்படும் தியான முறை)

மலர்: 4 ★ இதழ்: 4 ★ சித்திரை : 2025 ★ விலை: ₹ 2.50/- ★ ஆண்டு சந்தா : ₹ 30/-


# தம்மத்தின் அமுதசுரபி

தம்மத்தின் தூதவர்களே, தொண்டர்களே!

மேலும் ஏராளமான மக்கள் தம்மத்தோடு தொடர்புகொண்டு, அதன் பயன் பெற வேண்டும் என்பதால் தம்மத்தை எவ்வாறு பரப்புவது என்பதைப் பற்றிய உங்களது புரிதலை ஆழமாக்க உலகை சுற்றிலுமிருந்து வந்து நீங்கள் இங்கே கூடியிருக்கிறீர்கள். எதிர் காலத்தில் இவ்விடத்தில் நீங்கள் எதை விவாதித்தாலும் அல்லது திட்டமிட்டாலும், இருபத்தைந்து நூற்றாண்டுகட்கு முன்பு தம்மத்தின் மிகப்பெருந் தூதுவரால் அருளப்பட்ட அடிப்படைக் கட்டளையை உங்களது மனங்களில் உறுதியாக நிருத்தி வையுங்கள். தம்மம் என்ன என்பதை மட்டுமல்ல அதை எவ்வாறு வழங்க வேண்டும் என்பது பற்றியும் அந்தக் கட்டளை விளக்குகிறது. அதன் ஒவ்வொரு வார்த்தையும் நினைவுகூருமளவு மதிப்பு

மிக்கது. எல்லாக் காலங்களிலும் உள்ள தம்ம தூதுவர்கள் அனைவர்க்கும் மாறாத முக்கியத்துவம் வாய்ந்தது தான் அந்தக் கட்டளை.

எந்த நோக்கத்தோடு தம்மத்தைப் பரவச் செய்ய வேண்டும்? உள்ளடங்கியிருக்கும் நோக்கம் தான் என்ன? புத்தமதத்திற்கோ, இந்துமதத்திற்கோ, கிறிஸ்துவமதத்திற்கோ அல்லது வேறு எந்தவொரு அமைப்பு சமயத்திற்கோ மக்களை மாற்றுவது தான் அந்த நோக்கமா? மாறாக, அப்பெருந்தூதுவர் தேவையான நோக்கத்தைத் தெளிவாக்கி விட்டார். பகுஜன ஹிதாய, பகுஜன சுகாய – பலரது நன்மைக்கும் பலனக்குமே தம்மம் பரப்பப் படவேண்டும். எத்துணை பேர்க்கு ஒருவர் தொண்டு செய்ய முடியுமோ அத்தனை பேர்க்கு. இந்தத் தொண்டு எவ்வாறு செய்யப் படவேண்டும்? மீண்டும் அதேக் கட்டளை பதிலைத் தருகிறது – லோகாநு கம்பாய – ஒருவரது இதயத்தில் தந்நலமற்ற அன்போடும், நல்ல எண்ணத்தோடும், மக்களுக்காகக் கொண்ட கருணையோடும் செய்யப் பட வேண்டும்.

இந்தக் கட்டளையோடு அவர்களது தொண்டு பொருந்துகிறதா என்பதை தம்மத் தொண்டர்கள், தூதுவர்களாகிய எல்லோரும் திருத்திக்கொள்ள தங்களையே ஆய்வு செய்து கொள்ள வேண்டும்; ஏனெனில், ஆணவம் எந்த நேரத்திலும், எவரையும் கடுமையாகத் தாக்கி விடலாம். ஆணவம் தாக்கும் போது, செய்யும் தொண்டை விட, ஒருவர் பெறும் பெயரும், ஒருவர்க்கு அளிக்கப் படும் முதன்மையும் மிகவும் முக்கியமானதாகத் தோன்றும். இந்த மனநிலை, பைத்தியமே தவிர வேறு எதுவுமில்லை, மேலும் அதிக ஆபத்தானது. ஏனெனில், அது மிகவும் நுட்பமானதாகவே இருக்கும். இந்த காரணத்தால் ஒருவர் இடைவிடாமல் அதன் வரவைக் கண்காணித்த வண்ணம் இருக்க வேண்டும்.

தனிமனித பொருளியல் லாபம் பற்றிய பேச்சே கிடையாது என்பது உண்மை தான்; ஆனாலும் தம்மத் தொண்டின் சில செயல்கள், சில நேரங்களில், பெயருக்கும், புகழுக்கும் இட்டுச் செல்லலாம். இது கவர்ச்சியாக மாற விட்டுவிடாமல் எச்சரிக்கையாக இருங்கள். நீங்கள் தொண்டு செய்பவர்களுக்காக இரக்கம் கொண்டு, கைம்மாறாக எதையும் எதிர்பார்க்காமல் நீங்கள் உழைக்க வேண்டும் என்பதை

நினைவில் கொள்ளுங்கள். அவர்களே மிகமிக முக்கியமானவர்கள், தொண்டு செய்பவர்கள் அல்ல. உங்களது ஆணவம் எவ்வளவு குறைவானதாக உள்ளதோ, அந்த அளவு உங்களது நன்மை பெரிதாக இருக்கும், அந்த அளவு மேலும் சிறப்பாகத் தொண்டு செய்ய நீங்கள் தகுதியுடையவராக இருப்பீர்கள்.

நீங்கள் தேடிக் கொடுக்க வேண்டிய தொண்டு எதுவாக இருக்கும்? மீண்டும், பேராசான், விளக்கியிருக்கின்றார் – தேசேத தம்மம் – மக்களுக்கு தம்மத்தைக் கொடுங்கள்; தம்மத்தைத் தவிர வேறெதையுமல்ல. எந்தவொரு மத அமைப்புக்குட்பட்ட தம்மத்தை அல்ல, எல்லோரும் பயன் படுத்தக் கூடிய பொதுவான பிரபஞ்ச நியதியை மட்டுமே அளிக்க வேண்டும். அதைப் பயிற்சி செய்கிறவர்களுக்கு ஒவ்வொரு நிலையிலும் அது பயன்களைத் தருகிறது என்பது உண்மையான தம்மத்தின் ஒரு தனிப்பண்பாகும். பேராசான் சொல்வதுபோல, அது ஆதிகல்யாண, மஜ்ஜேகல்யாண, பரியோசான கல்யாண – தொடக்கத்திலும், நடுவிலும், முடிவிலும் பயன்தரத் தக்கது. நெறியில் உள்ள முதலாவது படிகளே, உடனடியாக, ஆக்கப்பூர்வமான விளைவுகளைத் தருகின்றன; இவை மேலும் செல்லுங்கால், அதிகரிக்கின்றன. இறுதி குறிக்கோள் அடைகிறபோது, பயன்கள் அளவுகடந்ததாக இருக்கின்றன. இவ்விதமாக, பயிற்சியின் ஒவ்வொரு படியும் நன்மையை விளைவிக்கிறது. உண்மையான தம்மத்தை அடையாளங்காண இதுவும் ஒரு முக்கியமான அம்சமாகும்.

மற்றொன்று, தம்மம் முழுமையானது. அதை வலிமையுள்ளதாக்க அதில் சேர்க்கப் படவேண்டியது எதுவுமில்லை, அதிலிருந்து நீக்கப்படவேண்டியதும் எதுவுமில்லை. அது கேவலங் பரிபுன்னங், பரிசுத்தங். தம்மம் ஒரு பூர்ணபாத்திரம் போன்றது; அதை நிறைப்பதற்கு வேறு அதிகமாக எதுவும்

வேண்டுவதில்லை; கூடுதலாக எதுவாக இருப்பினும், ஏற்கனவே நிரம்பியுள்ள பாத்திரத்தை உடைப்பதாகவே இருக்கும்.

பல்வேறு பின்னணிகளைக் கொண்ட மக்களுக்கும் மேலும் கவர்ச்சிக்கத் தக்கதாக தம்மத்தை ஆக்க

வேண்டும் என்ற நம்பிக்கையில் சேர்க்க வேண்டும் என்ற உந்துதல் அடிக்கடி வருவது நல்ல எண்ணத்தோடு கூடியதாகவும் இருக்கலாம், "நல்லதாகவே இருக்கும் ஒன்றில் சேர்ப்பது என்ன தீமை இருக்கிறது?" என்று கூட ஒருவர் கேட்கலாம். தம்மம் கடைசியாகப் பின்னுக்குத் தள்ளப்பட்டு, மறக்கப்பட்டு விடும் அபாயம் உண்டு என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். சேர்க்கைகள் உலகியல் நன்மைகளை கொடுக்கலாம்; ஆனால் , தம்மத்தின் குறிக்கோள், துன்பத்திலிருந்து விடுதலை என்னும் உலகியலைக் கடந்த ஒரு குறிக்கோளாகும். தன்னளவில் தீங்கில்லாததாக இருக்கலாம்; ஆனால், இந்தக் குறிக்கோளின் நாட்டத்தை இழக்க, அது நமக்குக் காரணமாக இருக்குமானால், அது மோசமான ஆபத்தாக மாறிவிடும்.

எந்த வழியிலாவது தம்மத்தைச் சுருக்க வேண்டும் என்ற இயக்கங்களும் இதேபோல உள்நோக்கம்

கொண்டவையே. மீண்டும் சொல்கிறேன்; போதனையை ஒப்புக் கொள்ளத் தடங்கலாக இருக்கும் அம்சங்களைக் காணுகின்ற மக்களுக்குப் புண்படச் செய்வதை நீக்கும் எண்ணம் நல்லது தான்; 2500 ஆண்டுகட்கு முன்னால், உலகப் பேராசான் மீண்டும் கண்டுபிடிக்கப் பட்ட இயற்கையின் நியதியே அது; எந்தவொரு குறிப்பிட்ட கொள்கைகளின் அமைப்பு ஏற்பதற்காக தம்மம் உருவாக்கப்பட்டதல்ல என்பதை, இத்தகைய உந்துதல்களுக்கு எதிராக, நாம் நினைவிற்குக் கொண்டுவர வேண்டும். இறுதிக் குறிக்கோளிடம் கொண்டு செல்ல அதன் ஒவ்வொரு பகுதியும் தேவைப்படுகிறது. ஸீலமோ, ஸமாதியோ, பஞ்ஞாவோ சிலர் விவாதத்திற்குரியதாகக் காணும் அம்சங்களை நீக்குவது உணவுக்கு மணம் சேர்க்கும் ஒரு நல்ல வழியாக வேண்டுமானால் இருக்கலாம், ஆனால், போதனை சாரம் போய்விடுமானால் அதன் மதிப்பு என்ன ஆகும்? நாம் கூட்டத்தைத் தேடவில்லை, நமக்கும் பிறர்க்கும் விடுதலை தான்.

அமிர்தக் கோப்பையைக் கொடுத்தால், "அது மிகவும் புளிப்பு" என்று ஒருவர் சொல்வார். "இன்னும் சிறிது சர்க்கரை சேர்த்தால், அது நன்றாக இருக்கும்." என்று மற்றொருவர் சொல்வார். மிக்க நல்லது, அதில் சிறிது சர்க்கரை கலந்து விடுங்கள்; அவ்வாறு செய்வதில் எந்தத் தீங்கும் இல்லை. ஆனால், அடுத்தமுறை

அக்கோப்பை கொடுக்கப் படுமானால், இன்னும் சுவை சேர்க்கிறோம், ஒவ்வொரு முறையும், கொஞ்சம் அதிகமாகவே, கடைசியாக அமிர்தத்தின் சுவையே போய்விடும். பின்பு மக்கள் சர்க்கரையையும் நீரையும் கலந்து, அதையே அமிர்தம் என்று சொல்லி குடிப்பார்கள்; அவர்களது தாகம் தணியவில்லையே என்று வியப்பார்கள். அதைப் போலவே, தம்மமாகிய அமிர்தமும்; உண்மையாகவே, அதனால் பயனடைய வேண்டுமானால், எந்தவொரு கலப்பும் இல்லாமல், அதன் தூய வடிவத்தில் அதனைப் பருகுங்கள்.

வார்த்தைகள் வார்த்தைகளாக மட்டுமே இருக்கின்றன; தம்மத்திற்குப் பிறரை ஈர்க்க, உங்களது வாழும் வழியால் ஒரு முன்னோடியாக உங்களை அமைத்துக் கொள்வது தான் இன்னும் பயனுள்ளதாக இருக்கும். அதனால் தான் அம்மகாகுரு சொன்னார் – ப்ரம்மசரிய பகாசேத: அதை நீங்களே கண்டுப்பிடிப்பதன் மூலம், தம்மத்தின் ஒரு விளக்கமான முன்னோடியாக இருங்கள். அதைப் பயிற்சி செய்யப் பிறரை ஊக்குவிக்கும் சிறந்த வழி இது தான்.

“விடுதலை அடைய எல்லோரும் பின்பற்ற வேண்டிய சரியான திசை இது தான். உண்மையான மகிழ்ச்சிக்கு நேரான வழி இது தான்” என்று ஒரு குறிப்பிட்ட திசையில் நீங்கள் உங்கள் விரலைக் காட்டி சொல்வதாகக் கொள்வோம். வழியை ஆய்வு செய்வதற்கு முன்னால், மக்கள் முதலில் உங்கள் விரலையே பார்ப்பார்கள். அழுக்காலோ அல்லது இரத்தத்தாலோ அது கரைபடிந்ததாக இருக்குமானால், நீங்கள் காட்டும் வழியில் அவர்களுக்கு என்ன நம்பிக்கை இருக்க முடியும்? தூய்மையாக்கும் நெறியைப் பின்பற்றுமாறு பிறரை ஊக்குவிக்க நீங்கள் விரும்பினால், உங்களுள் தூய்மையை வளர்த்துக் கொள்ளுங்கள்.

ஒரு குறிப்பிட்ட காரணம் ஒரு குறிப்பிட்ட விளைவையே உண்டுபண்ணும் என்னுமிந்த எளிமையில் தான் இப்போதனை அசாதாரண நிலையுடையதாக, வழக்கு கடந்த நிலையுடையதாக இருக்கிறது. விளைவை நீக்க, காரணத்தை அகற்று. மகிழ்ச்சியான உணர்ச்சிகளுக்கு விருப்பத்தோடும், மகிழ்ச்சியற்ற உணர்ச்சிகளுக்கு வெறுப்போடும் எதிர்ச்செயல் புரிவது துன்பத்தை உடனடியாக உருவாக்கும். எதிர்ச் செயல் புரிவதற்குப் பதிலாக, அநுபவத்தின் நிலையற்ற தன்மையை ஒருவர் புன்முறுவலோடு கவனித்துப் புரிந்து கொள்வாரானால், துன்பம் எதுவும் எழுவதில்லை. இதுவே தம்மம் ஆகிய ப்ரபஞ்ச நியதி – சமயம், இனம், சமூகம், நாடு என எதனையும் பாராமல் எல்லோரும் கடைப் பிடிக்கக் கூடியது. அதன் தொன்மைத் தூய்மையில், நாம் பிறர்க்கு வழங்க வேண்டியது தம்மத்தின் இந்த சாரத்தைத் தான்.

தம்மத்தின் இவ்வடிப்படைக் கொள்கைகளை வைத்துக் கொள்ளுங்கள், அதை எப்படி வழுங்குவது என்னும் விளக்கம் எல்லாம் தானாகவே தெளிவாகும்.

தம்மத்தைப் பரப்புவதற்கு, சரியான அடிப்படைகள் அன்பும் கருணையுமாக இருப்பதனால், இந்தக் கூட்டத்தின் போது, உங்கள் விவாதங்களுக்கு அடித்தளமாக, அவற்றையே கொள்ள வேண்டும் . உங்களுடைய கருத்துகளில் எந்தவித பற்றுமின்றி கருத்துகளைச் சொல்லும் போது, தாழ்மையோடு அதனை எடுத்துக் கூற எச்சரிக்கை எடுத்துக் கொள்ளுங்கள். உங்களுக்குள்ள எல்லா தெளிவோடும் நீங்கள் பேசப் பாருங்கள். மூன்று முறை நீங்கள் உங்கள் கருத்தைத் தெரிவிக்க முன் வரலாம்; ஆனால், பிறர் அதை இன்னமும் மறுப்பாரேயானால், மகிழ்ச்சியோடு அதை விட்டு விடுங்கள். தனக்கு உரிய சிறந்த வழியை தம்மம் தேர்ந்து கொள்ளும் என்பதையும் நீங்கள் புரிந்து கொள்ளுங்கள்.

வெற்றுக் குடம் என்று பிறர்க்கு கொடுப்பதற்கு எதுவுமில்லை என்பதை நினைவிலிருத்துங்கள். எனவே, தம்மத்தால், உங்களை நிரப்பிக் கொள்ளுங்கள். உங்களுக்குள்ளே உண்மையான அமைதியையும்,

இசைவையும் கண்டுபிடியுங்கள்; இயல்பாகவே, பிறர் பயன்பெற இவை பெருக்கெடுத்தோடும், உங்களது நன்மைக்கும், மகிழ்ச்சிக்கும், விடுதலைக்கும், பலரது நன்மைக்கும், மகிழ்ச்சிக்கும், விடுதலைக்கும், தம்ம நெறியில் நீங்கள் நடந்து செல்வீர்களாக!

**எல்லா உயிர்களும் அமைதியாக இருப்பதாக!**
**எல்லா உயிர்களும் மகிழ்வாக இருப்பதாக!**
**எல்லா உயிர்களும் விடுதலையடைந்திருப்பதாக!** ●